DEPOSITION OF WITNESS

IN THE COURT OF PRINCIPAL LABOUR COURT, COIMBATORE.

**ID** 72/2022

| | |
|---|---|
| DEPOSITION OF WITNESS | MW1 |
| NAME | K. ஜெயக்குமார் |
| FATHER NAME | R. கிருஷ்ணமூர்த்தி |
| ADDRESS | சைட் எண் 60, பெரிய விநாயகர் நகர், காளப்பட்டி அஞ்சல், கோவை. |
| AGE | 48 |

Solemnly affirmed in accordance with provision of Act x of 1875.

Date.26.02.2026

**முதல் விசாரணை –**

நான் இவ்வழக்கின் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி ஆவேன். நான் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் AGM Finance & Accounts ஆக பணியாற்றி வருகிறேன். எனது எழுத்து பூர்வமான பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதனை என் சாட்சியமாக ஏற்கவேண்டுகிறேன். எனது தரப்பில் தாக்கல் செய்யப்படும் கீழ்கண்ட ஆவணங்களை எனது வழக்கு தரப்பு ஆவணமாக குறியீடு செய்ய கேட்டுக்கொள்கிறேன்.

12.02.2026 தேதியிட்ட எதிர்மனுதாரர் நிர்வாகம் இவ்வழக்கில் சாட்சியமளிப்பதற்கு K. ஜெயக்குமாருக்கு வழங்கிய அங்கீகார கடிதம் Ex M1.

05.11.2020 தேதியிட்ட மனுதாரர் மீது சக தொழிலாளி கொடுத்த புகார் Ex M2. 23.11.2020 தேதியிட்ட மனுதாரருக்கு எதிர்மனுதாரர் வழங்கிய காரணம் கோரும் அறிவிப்பு Ex M3. 27.11.2020 தேதியிட்ட மனுதாரர் எதிர்மனுதாரருக்கு கொடுத்த விளக்க கடிதம் Ex M4. 28.11.2020 தேதியிட்ட மனுதாரருக்கு எதிர்மனுதாரர் வழங்கிய எச்சரிக்கை உத்தரவு Ex M5. 06.05.2021 தேதியிட்ட எதிர்மனுதாரர் நிறுவனத்தின் மெசின்சாப் பிரிவின் மேற்பார்வையாளர் மனுதாரர் மீது கொடுத்த புகார் மற்றும் புகைப்படத்தின் நகல் Ex M6. 10.05.2021 தேதியிட்ட மனுதாரருக்கு எதிர்மனுதாரர் வழங்கிய காரணம் கோரும் அறிவிப்பு Ex M7. 29.09.2021 தேதியிட்ட மனுதாரருக்கு எதிர்மனுதாரர் தண்டனையாக வழங்கிய தற்காலிக வேலை நீக்க உத்தரவு Ex M8. 17.07.2021 தேதியிட்ட மனுதாரருக்கு எதிர்மனுதாரைர் பதிவு தபால் மூலம் அனுப்பிய காரணம் கோரும் அறிவிப்பு Ex M9. அஞ்சலக ஒப்புகை அட்டையின் நகல் Ex M10. மனுதாரர் எதிர்மனுதாரருக்கு அனுப்பிய தேதியிடப்படாத விளக்க கடிதத்தை எதிர்மனுதாரர் 26.07.2021 பெற்றுக் கொண்டது Ex M11. 03.08.2021 தேதியிட்ட மனுதாரருக்கு எதிர்மனுதாரர் பதிவு தபால் மூலம் அனுப்பிய கூடுதல் காரணம் கோரும் அறிவிப்பு, FIR, தினகரன் நாளிதல் நகல் மற்றும்

பெயில் உத்தரவு நகல் Ex M12. அஞ்சலக ஒப்புகை அட்டையின் நகல் Ex M13. 05.08.2021 தேதியிட்ட மனுதாரர் எதிர்மனுதாரருக்கு அனுப்பிய விளக்க கடிதம் Ex M14. 08.07.2021 தேதியிட்ட மனிதவள மேம்பாட்டுத்துறை அலுவலர் திரு. J. மனோஜ் என்பவர் தினகரன் நாளிதழில் மனுதாரர் மீது பிரசுரிக்கப்பட்ட விவரத்தை குறிப்பிட்டு கொடுத்த கடிதம் மற்றும் தினகரன் நாளிதழ் நகல் Ex M15. 07.07.2021 தேதியிட்ட மனுதாரர் மீது மெசின்சாப் மேற்பார்வையாளர் விஷ்ணுகுமார் கொடுத்த புகார் Ex M16. 07.07.2021 தேதியிட்ட மனுதாரர் மீது மெசின்சாப் முதுநிலை மேற்பார்வையாளர் திரு. M. வேலுசாமி கொடுத்த புகார் நகல் Ex M17. ஜீலை 2021 மற்றும் ஆகஸ்ட் 2021 காலத்திற்கு எதிர்மனுதாரர் நிறுவனத்தின் தொழிலாளர்களின் வருகை பதிவேட்டின் நகல் Ex M18. எதிர்மனுதாரர் நிறுவனத்தின் சான்றளிக்கப்பட்ட நிலையாணை நகல் Ex M19. 10.08.2021 தேதியிட்ட மனுதாரருக்கு எதிர்மனுதாரர் பதிவு தபால் மூலம் அனுப்பிய அறிவிப்பு மற்றும் 17.08.2021 தேதியிட்ட அஞ்சலக ஒப்புகை அட்டையின் நகல் Ex M20. 11.11.2021 தேதியிட்ட மனுதாரருக்கு எதிர்மனுதாரர் பதிவு தபால் மூலம் அனுப்பிய இரண்டாவது காரணம் கோரும் அறிவிப்பின் நகல் Ex M21. அஞ்சலக ஒப்புதல் அட்டையின் நகல் Ex M22. 16.11.2021

தேதியிட்ட மனுதாரர் எதிர்மனுதாரருக்கு கால அவகாசம் கோரி அனுப்பிய கடிதம் Ex M23. 18.11.2021 தேதியிட்ட எதிர்மனுதாரர் மனுதாரருக்கு கால அவகாசம் வழங்குவதை குறிப்பிட்டு அனுப்பிய கடிதம் Ex M24. 24.11.2021 தேதியிட்ட மனுதாரர் எதிர்மனுதாரருக்கு அனுப்பிய விளக்கக் கடிதம் Ex M25. 29.11.2021 தேதியிட்ட எதிர்மனுதாரர் மனுதாரருக்கு வழங்கிய பணி நீக்க உத்தரவின் நகல் Ex M26.

குறுக்கு விசாரணை

எதிர்மனுதாரர் நிறுவனத்தில் நிரந்தர பணியாளர்கள் சுமார் 167 பேர், ஒப்பந்ததாரர்கள் சுமார் 10 க்கும் குறைவாகவும் மற்றும் ஒப்பந்த தொழிலாளர்கள் சுமார் 100 முதல் 150 பேர்கள் order களை பொறுத்து பணியமர்த்தபடுவார்கள். மனுதாரர் மீது என்ன குற்றசாட்டு உள்ளது என்றால் பொய்யான தகவல்களை சொல்லி விடுப்பு கேட்டுள்ளார் என்றும் 10 நாட்களுக்கு மேல் முறையாக விடுப்பு தராமல்ல பணிக்கு ஆஜராகவில்லை என்றும் மேலும் மனுதாரர் இறப்பிற்கு சென்றதாக கூறி விடுப்பு கேட்டும் மீண்டும் குடும்ப சொத்து தகராறு என்று சொல்லி ஒரு வாரம் விடுப்பு கேட்டும் அதற்கு பின்னிட்டும் மனுதாரர் வேலைக்கு வரவில்லை என்று சொல்லி நாங்கள் விசாரித்த போது தான் மனுதாரரை குற்றவியல் வழக்கு

போலிஸார் கைது செய்த்ததை பற்றி தினகரன் நாளிதழில் பிரசுரம் செய்யததை பார்த்து தெரிந்து கொண்டோம். இந்த விவரங்களை தான் மனுதாரர்க்கு எதிராக ஒழுங்கீன செயலாக சுமத்தப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் நிறுவனத்திற்கு வெளியில் நடக்கக்கூடிய சம்பவம் மனுதாரர் போதை பொருளை விற்றதாக மனுதாரர் மீது பீளமேடு காவல் துறையினர் வழக்கு தொடர்ந்துள்ளனர் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் நிறுவனத்தின் நிலையாணைகளின் படி நிறுவனத்திற்கு வெளியில் நடக்கக்கூடிய சம்பவத்திற்கு எதிர்மனுதாரர் நிறுவனம் நடவடிக்கை எடுக்க அதிகாரம் உள்ளதா என்றால் இல்லை. மனுதாரர் மீது முன்வைக்கப்பட்டுள்ள குற்றவியல் வழக்கிற்கு நீதிமன்றம் மனுதாரர் குற்றவாளி என்று கண்டு தண்டனை வழங்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. மேற்கண்ட சம்பவம் உண்மையா, இல்லையா என்று எதிர்மனுதாரர் நிறுவனத்திற்கு தெரியுமா என்றால் தெரியாது. 06.07.2022 ல் காலை சுமார் 8 மணிக்கு எதிர்மனுதாரர் நிறுவனத்தின் மேற்பார்வையாளர் விஷ்ணுகுமார் என்பவரிடம் மனுதாரரின் மனைவி தொடர்பு கொண்டு விடுப்பு வேண்டி என்ன காரணத்தை சொல்லி விடுப்பு வேண்டினார் என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் எனக்கு நேரடியாக தெரியாது. அன்று இரவு 7.24 மணிக்கு மறுபடியும்

விஷ்ணுகுமாரை மனுதாரர் மனைவி தொடர்பு கொண்டு விடுப்பு கேட்ட விவரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. எதிர்மனுதாரர் நிறுவனத்தின் அலுவலர்கள் மூலமாக எனக்கு தெரியும். எதிர்மனுதாரர் நிறுவனத்தின் முதுநிலை பொறியாளர், வேலுசாமி அவர்கள் 07.07.2021 அன்று மனுதாரர் மனைவியை தொடர்பு கொண்டு பேசிய விவரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. அலுவலர் மூலமாக தெரியும். மனுதாரர் கைது செய்யப்பட்ட விவரமும், அதற்கான காரணமும் எதிர்மனுதாரர்க்கு எப்போது தெரியும் என்றால் 08.07.2021 அன்று தினகரன் நாளிதழை பார்த்து எங்கள் நிறுவனத்தின் மனோஜ்குமார் எனக்கு தகவல் தெரிவித்தார். மனுதாரர் 06.07.2021 தேதியில் விடுப்பு கேட்டும் எதிர்மனுதாரர் அவர்க்கு விடுப்பு வழங்கவில்லை என்றால் 06.07.2021 ல் விடுப்பு வழங்கப்பட்டது. ஆனால் அவர் கூறிய காரணங்கள் உண்மை அல்ல என்பதால் அவர் விடுப்பு மறுக்கப்பட்டது என்ற விவரம் Ex M18ல் குறிப்பிடப்பட்டதா என்றால் இல்லை. எங்கள் நிறுவன அலுவலர்கள் மனோஜ்குமார் மற்றும் யுவராஜ் சொன்ன விவரங்களை பிரமாண வாக்குமூலம் மற்றும் எதிருரையில் சொல்லியுள்ளோமா என்றால் இல்லை. ஆனால் ஆவணங்களாக தாக்கல் செய்துள்ளோம். மனுதாரர் பொய்

காரணங்களை சொல்லி விடுப்பு கோரியுள்ளார் என்று கண்டறிந்வுடன் விடுப்பு மறுக்கப்பட்ட விவரங்களை தெரிவித்து  மீண்டும் வந்து பணியில் சேர சொல்லி அவருக்கு கடிதம் அனுப்பினீர்களா என்றால் இல்லை. தொலைபேசியில் தொடர்பு கொண்டோம்.   மனுதாரர் எவ்வளவு நாள் சிறையில் இருந்தார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் தொலைபேசியில் தொடர்ப்பு கொண்ட போது மனுதாரரிடம் பேசினேனா என்றால் 21.07.2021 அன்று மனுதாரரிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டும், மீண்டும் பணிக்கு வர அழைத்துள்ளோம். என்னுடைய பிரமாண வாக்குமூலம் மற்றும் எதிருரையில் மேற்கண்ட சங்கதிகளை தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். மேற்சொன்ன விவரங்களை மனுதாரர்க்கு அளித்த Ex M12 காரணம் கோரும் அறிவிப்பில் தெரிவித்துள்ளோமா என்றால் சொல்லவில்லை.  பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 6 ல் 06.07.2021 முதல் 17.07.2021 வரை மனுதாரர் நிறுவனத்திற்கு எந்த வித தகவலும், முன்னறிவிப்பும் இன்றி மனுதாரர் பணிக்கு ஆஜராகமல் இருந்துள்ளார் என்று கூறியுள்ளோம் என்றால் சரிதான்.  18.07.2021 வரை எதிர்மனுதாரர்க்கு மனுதாரர் பற்றிய தகவல் எதுவும் தெரியாது என்றால் அவரிடம் இருந்து எந்த தகவலும் இல்லை.  19.07.2021 தேதியில் சொந்த

பிரச்சனைக்காக போலீஸார் கைது செய்ததாக மனுதாரர் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் எந்த அதிகாரியிடம் கூறினார் என்றும் எந்த வழியில் கூறினார் என்பதை பற்றிய எந்த விவரமும் எதிர்மனுதாரர் பிரமாண வாக்குமூலத்தில் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். மேற்சொன்ன சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும், ஆகையால் தான் விவரங்களை பிரமாண வாக்குமூலத்தில் சரியாக தெரிவிக்க இயலவில்லை என்றால் சரியல்ல. மனுதாரர் வேலைக்கு வராததால் எதிர்மனுதாரர் நிறுவனத்தின் ஒழுங்கு, கட்டுபாடு, உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது என்று எதிர்மனுதாரர் கூறியுள்ளதற்கு ஆதாரங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. மனுதாரர் எதிர்மனுதாரரிடம் பொய்யான காரணங்களை கூறி கடிதம் வாயிலாக விடுப்பு விண்ணப்பம் எதுவும் சமர்பித்தாரா என்றால் இல்லை. பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ள படி Ex M19 நிலையாணைகள் ஷரத்து 21(IX) படி ஒரு தொழிலாளி பணியில் இருக்கும் சமயத்தில் குற்றவியல் வழக்கில் (moral turpitude) தண்டிக்கப்பட்டால் தான் ஒழுங்கீனம் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மனுதாரர் அவர் மீது போடப்பட்ட முதல் தகவல் அறிக்கை தொடர்பான குற்றவியல் வழக்கு பற்றிய புலன் விசாரணை விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு

எதுவும் தெரியாது. இன்றைய தேதி வரை மனுதாரர் மீது குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மனுதாரர் எதிர்மனுதாரரிடம் வேலை செய்யும் சமயத்தில் வேறு தொழில் எதுவும் செய்து வந்தாரா அல்லது பெட்டி கடை எதுவும் நடத்தி வந்தாரா என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தினகரன் நாளிதழில் வந்த செய்தியை வைத்து காரணம்கோரும் அறிவிப்பில் கூறியுள்ளோம். செய்தி தாளில் வரக்கூடிய செய்திகள் அனைத்தும் உண்மையா என்று எதிர்மனுதாரர் விசாரித்தோமா என்றால் விசாரிக்கவில்லை. எந்த வித விசாரணையும் மேற்கொள்ளாமல் செய்தி தாளில் வந்த செய்தியை சாட்சியமாக ஏற்று கொள்ள முடியாது என்றால் சரியல்ல. குற்றவியல் வழக்கில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட மனுதாரரால் பணிக்கு வர இயலாது என்றால் சரிதான். Ex M14 05.08.2021 ல் மனுதாரர் எதிர்மனுதாரரிடம் தனக்கு மீண்டும் பணி வழங்க வேண்டுமாறும் பொய்யான வழக்கில் கைது செய்யப்பட்டதாகவும் தான் எந்த காலத்திலும் பெட்டி கடை எதுவும் வைத்து நடத்தவில்லை என்று தெரிவித்துள்ளார் என்றால் சரிதான். மேலும் Ex M11 ஆவணத்தின் படி 17.07.2021 தேதியிட்ட எங்களது அறிவிப்பிற்கு விளக்கம் சமர்பித்தும், தனக்கு மீண்டும் பணி வழங்க வேண்டும் என்று Ex M14ல்

குறிப்பிட்டுள்ள அதே காரணங்களை மனுதாரர் மீண்டும் நினைவு கூர்ந்தார் என்றால் சரியல்ல. மனுதாரர் அனுப்பிய 2 கடிதங்களை பெற்று கொண்ட பிறகு மனுதாரரை உடனடியாக வேலைக்கு வந்து சேர சொல்லி எதுவும் கடிதம் எதிர்மனுதாரர் அனுப்பினாரா என்றால் Ex M20 கடிதத்தில் குறிப்பிட்டுள்ளோம். எதிர்மனுதாரர் நிறுவனத்தில் மனுதாரர் வேறு சில குற்ற செயல்களில் ஈடுப்பட்டதாக Ex M3,7 அறிவிப்புகள் தாக்கல் செய்துள்ளோம் என்றும் அதற்கு மனுதாரர் அந்த குற்றசெயலுக்கு மன்னிப்பு கோரி பதில் கடிதம் எதுவும் சமர்ப்பித்துள்ளாரா என்றால் என்னால் ஆவணங்களை பார்த்து தான் சொல்ல முடியும். Ex M3,7 காரணம் கோரும் அறிவிப்பிற்கு எந்த உள்ளக விசாரணையும் எதிர்மனுதாரர் நடத்தவில்லை என்றால் Ex M7 காரணம் கோரும் அறிவிப்பு தொடர்பாக உள்ளக விசாரணை நடத்தியுள்ளோம். உள்ளக விசாரணை நடத்தியதில் மனுதாரர் குற்றசாட்டுகளை ஒப்பு கொண்ட விவரங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. மனுதாரர் எந்த வித தவறும் செய்யவில்லை என்றும், உண்மைக்கு புறம்பான காரணங்களை தெரிவித்து அவர் விடுப்பும் கேட்கவில்லை என்றால் சரியல்ல. எவ்வித முன்னறிவிப்பும் இன்றி மனுதாரர் பணிக்கு வராமல் absent ஆனதாக முன்வைக்கப்பட்ட

குற்றசாட்டு உண்மையல்ல என்றால் சரியல்ல. மனுதாரர் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் வேலை செய்து வந்த சமயத்தில் அவர் வேறு பெட்டி கடை எதுவும் நடத்தவில்லை என்ற குற்றசாட்டை 10.08.2021 தேதியிட்ட கடிதத்தின் மூலமாகவே வலியுறுத்தவில்லை என்று தெரிவித்துவிட்டோம். நீதிமன்ற விசாரணையில் இருப்பதால் அவ்வாறு தெரிவித்தோம். எதிர்மனுதாரர் நிறுவனத்திற்கு மனுதாரர் அவபெயர் ஏற்படுத்தினார் என்று எந்த ஆதாரங்களையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மனுதாரர் குற்றவியல் வழக்கில் கைது செய்யப்பட்ட உண்மை விவரங்களை தான் நிறுவாகத்திற்கு தனது கடிதங்கள் வாயிலாக நிறுபித்துள்ளார் என்றும், எக்காலத்திலும் பொய் காரணங்களை அவர் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. நிறுவனத்தின் வெளியில் நடைபெறக்கூடிய சம்பவங்களுக்கு எதிர்மனுதாரர் நிறுவனம் ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதற்கு சட்டப்படி உரிமை இல்லை என்றால் சரியல்ல. மனுதாரர் தற்போதும் எதிர்மனுதாரர் நிறுவனத்திற்கு வேலைக்கு வர தயாராக உள்ளார் என்றும், எதிர்மனுதாரர் மனுதாரருக்கு வேலை அளிக்க தயாராக உள்ளீர்களா என்றால் அதை பற்றி நிர்வாகம் தான் முடிவு எடுக்க முடியும். குற்றவியல் வழக்கில் நீதிமன்றம் இது நாள் வரை தண்டனை எதுவும் வழங்க

வில்லை என்பதால் மனுதாரருக்கு வேலை கொடுக்க வேண்டும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

மறுவிசாரணை இல்லை.

Sd/-xxx

தலைமை தாங்கும் அதிகாரி,

முதன்மை தொழிலாளர் நீதிமன்றம்,

கோயமுத்தூர்.